DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - M.C.No. 3/2024
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Defence RW1

Name : Ramamoorthy

Father Name /
Husband Name : Rangasamy

Village : Periyamudhaliyarchavady

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 02nd March 2026.

குறுக்கு விசாரணை

2019ம் ஆண்டு எனக்கும் மனுதாரருக்கும் திருமணம் நடந்தது. எனக்கும் மனுதாரருக்கும் பிறந்த குழந்தையின் பிறந்ததேதி 25.11.2020 ஆகும். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் 01.01.2023 அன்று மனுதாரர் பிரச்சனையால் என்னிடமிருந்து பிரிந்து சென்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

நான் தற்போது ஐஐப்எல் கம்பெனியில் கிளஸ்டர் கிரிடிட் மேனஜராக பணிபுரிந்து வருகிறேன். இன்றைய தேதியில் நான் மாதம் ரூ.90,000/- சம்பாதித்து வருகிறேன். நான் ரூ.90,000/- விட அதிகமான மாதம் சம்பாதிக்கிறேன் என்றாலும் வழக்கிற்காக குறைத்து சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என் பெயரில் சொத்துக்கள் எதுவும் இல்லை.

நான் தாக்கல் செய்த வருமான மற்றும் கடன் கணக்கு வாக்குமூலத்தில் பிராபர்ட்டி லோன் ஒன்றை என்பெயரில் எடுத்துள்ளதாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த பிராபர்ட்டி என் தந்தை பெயரில் உள்ளது. அதற்கான லோனை மட்டும் நான் என் பெயரில் எடுத்துள்ளேன்.

அந்த பிராபர்ட்டி லோனுக்காக மாதம் ரூ.25,000/- ஐசலுத்தி வருகிறேன். எனது வருமானம் மற்றும் கடன் கணக்கு வாக்குமூலத்தில் மாதம் ரூ.20,000/- ஐசலுத்துவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த தொகை தற்போது மாறுதல் செய்யப்பட்டுள்ளது. எனக்கு மூதாதையர் சொத்து எதுவும் உள்ளதா என்றால் இல்லை.

நான் தாக்கல் செய்துள்ள வருமானம் மற்றும் கடன் கணக்கு வாக்குமூலத்தில் எனக்கு இரண்டு பர்சனல் லோன் உள்ளதாகவும் அதற்கான மார்ச் 2026 அன்று நிறைவேறுகிறது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனதுவருமானம் மற்றும் கடன் கணக்கு வாக்குமூலத்தில் காலம் 5ல் குறிப்பிட்டுள்ளவாறு எங்கள் நிறுவனத்தின் மேலாளரின் அறிக்கையை சமர்பித்துள்ளேனா என்றால் இல்லை. 15 நாட்களில் சமர்ப்பிப்பேன்.

அவ்வாறு காலம் 5ல் குறிப்பிட்டுள்ளவாறு முன்று வருடத்திற்கான வங்கி கணக்கு பரிவர்த்தனைகளை தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வருமான அறிக்கையை(Pay slip) தாக்கல் செய்யும்போது தாக்கல் செய்கிறேன்.

ஒம்/- என்.பிரீத்தி,

நீதித்துறை நடுவர்,
வானூர்.